25-06-2025.

IDOP.No.45/2023

ம. சா. 1 புனிதா அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-

எனக்கும் என் கணவருக்கும் நடந்த திருமணம் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான். எங்களுடைய திருமணத்திற்கும், திருமண நிச்சயத்திற்கும் இடையில் 3 மாதகால இடைவெளி இருந்தது என்றால் சரிதான். மேற்படி 3 மாதகால இடைவெளியில் எனக்கும் என் கணவருக்கும் இடையே இயல்பான பேச்சுவார்த்தை இருந்தது என்றால் சரியல்ல. அவரது பேச்சுவார்த்தை சரியில்லாததால் முதலில் நிச்சயம் செய்ததை நான் நிறுத்தினேன். 2 வது முறை என் கணவரின் சித்தப்பா வந்து பேசி நிச்சயித்துதான் திருமணம் நடந்தது. மேற்படி விவரத்தை மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். திருமணத்திற்காக என் கணவர் தரப்பில் 11 பவுன் தாலிச்செயின், அரை பவுன் எடையுள்ள 4 மோதிரங்கள் போடப்பட்டது என்றால் 11 பவுன் தாலிச்செயின் மட்டும்தான் போட்டார்கள். மேற்படி 4 மோதிரங்கள் எனக்கு போடப்பட்டது என்றும் நான் வழக்கிற்காக இல்லை என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணம் நடந்த பின்னர் நாங்கள் இருவரும் 3 மாதங்கள் நானும் என் கணவரும் என் கணவர் வீட்டில் சேர்ந்து வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். மேற்படி 3 மாத காலங்களில் எங்களுக்கு தாம்பத்ய உறவு இருந்து வந்தது என்றால் சரிதான். ஆனால் அதேபோல் அவரிடம் அடியும் வாங்கினேன். அடிக்கடி நான் அவரிடம் அடி வாங்குவதாக சொல்வது பொய் என்றும், அவர் என்னை அடிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளபடி சொத்து சம்மந்தமான சண்டை எதுவும் நடக்கவில்லை என்றும் அதற்காக என்னை அடித்து வீட்டிற்குள் பூட்டிவைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அப்படி ஒரு சம்பவமே நடக்காதபோது என் பெற்றோர்கள் வந்து சமாதானம் செய்து வைத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மூன்று மாதம் என் கணவர் வேலை நிமித்தமாக வெளிநாடு சென்றார் என்றால் சரிதான். ஆனால் அவர்

வெளிநாடு போவதாகவோ, விசா கிடைத்ததாகவோ என்னிடம் சொல்லவே கிடையாது. அவ்வாறு என் கணவருடன் வாழ்ந்துவந்த 3 மாத காலத்தில் எனக்கு தண்டுவட பிரச்சனை இருந்ததால் மாடி ஏறி இறங்க முடியாது என்பதால் என் கணவர்தான் எனக்குரிய வேலைகளை பார்த்துவந்தார் என்றால் சரியல்ல. என் கணவர் வெளிநாடு போனபின்னர் அங்கு என் கணவருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் ஐசியுவில் இருந்தவிவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் நண்பர் மூலம் தெரிந்துகொண்டேன். அப்படி என்கணவரது உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் நான் வெளிநாடு செல்லவேண்டுமென சொல்லி எனக்கு விசா எடுக்கச்சொல்லி தொந்தரவு செய்து வந்தேன் என்றால் சரியல்ல. அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போவதற்கு முன்னரே எனக்கு விசா எடுத்துவிட்டார். என் கணவருக்கு 2022ம் வருடம் டிசம்பர் மாதம் வரை தான் என் கணவருக்கு விசா இருந்தது என்றால் எனக்கு தெரியாது. நானும் அந்த காலகட்டத்தில் விசா எடுக்கச்சொல்லி நானும் தொந்தரவு செய்துவந்தபோது எதிர்மனுதாரர் தனக்கும் விசா முடியப்போகிறது இருவருக்கு சேர்ந்து எடுப்போம் என சொன்னார் என்றால் சரியல்ல. மேற்படி விசயமாக என் கணவருக்கு வாட்ஸ்அப் மூலமாக மெசேஜ் அனுப்பி தொந்தரவு செய்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் ஆர்.சி.கிறிஸ்துவர் மதத்தைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். என் கணவர் வெளிநாட்டில் இருக்கும்போது அவருக்கு தெரியாமல் சிஎஸ்.ஐ. சர்ச்சுக்கு பிரேயர் மீட்டிங்குக்கு சென்றேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்னரே அவரிடம் சொல்லிவிட்டுத்தான் அதன் பின்னர் போனேன். மேற்படி விவரங்கள் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். வெளிநாடு போவதற்கு முன்பாக என் கணவர் என்னுடைய HDFC வங்கியில் பணம் போட்டார் என்றால் அவரது வீட்டு செல்வுக்காகத்தான் போட்டார். அதற்கும் நான் கணக்கு வைத்துள்ளேன். மேற்படி பணத்தை என் கணவர் வெளிநாட்டில் இருக்கும்போது என்னுடைய சுயதேவைக்குத்தான் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி பணத்திலிருந்து சிஎஸ்ஐ. பிரேயர் மீட்டிங்குக்கு பணம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்

கணவர் கொடுத்த பணத்திலிருந்து என்னுடைய தேவைக்காக செலவு செய்த கணக்கைத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவர் வெளிநாட்டில் இருக்கும்போது என் தாயார் வீட்டுக்கு போய்விட்டு வந்தேன் என்றால் போய் வந்தேன். எனக்கு முதுகுதண்டுவட பிரச்சனைக்காக என் கணவர் என்னுடன் இருந்தபோது சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார் என்றால் இல்லை. முதுகு தண்டுவட பிரச்சனையே எனக்கு இல்லை. முதுகு தண்டுவட பிரச்சனை இருப்பது சம்மந்தமாக என் கணவர் என்னை உதாசீனப்படுத்தவில்லை, அடிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் வீட்டிலிருந்து நான் ஆகஸ்ட் 2022ம் வருடம் என் பெற்றோர் வீட்டுக்கு போய்விட்டேன் என்றால் அப்போதுதான் பிரச்சனை ஏற்பட்டது. நான் வேலை தேடி சென்னை சென்றுவிட்டேன். என்னுடைய பெற்றோர் வீட்டுக்கு போன பின்னர் கூட நான் வாட்ஸ்சப் மூலமாக என் கணவருக்கு தொந்தரவு கொடுத்தேன் என்றால் சரியல்ல. என் கணவர் 2023 ம் வருடம் மே மாதம் ஊருக்கு வந்த விவரம் தெரியாது. என்னை தேடிவந்து சாவி கேட்டபோதுதான் தெரியும். என் கணவர் வீட்டிலிருந்து என் பெற்றோர் வீட்டிற்கு செல்லும்போது என் கணவர் பேரில் உள்ள சொத்துபத்திரம், இருசக்கர வாகனம், அவருடைய நகைகளை எடுத்துச்சென்றுவிட்டேன் என்றால் நகை இல்லை. சொத்து பத்திரத்தையும் இருசக்கர வாகனத்தையும் எடுத்துவந்தேன். 03.05.2023ம் தேதி என் பெற்றோர் வீட்டுக்கு என்னை அழைத்துச்செல்ல என் கணவர் வந்தார் என்றால் சாவி கேட்டுத்தான் வந்தார். பின்னர் வீட்டை உடைத்து உள்ளே சென்றுவிட்டார். அன்றைய தேதியில் என்னை அழைத்துச்செல்ல என் கணவர் வந்தும், என் பெற்றோர், என் அக்கா, அவர் கணவர் சேர்ந்து என்னை அனுப்பிவைக்கவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தேதியிலேயே நான் என் கணவரிடமிருந்து விவாகரத்து பெறுவதற்காக மேற்படி என் அக்கா, அக்கா கணவர் அனைவரும் எதிர்மனுதாரரை வழக்கறிஞரிடம் அழைத்துச்சென்றோம் என்றால் இல்லை. என் கணவர் என்னுடன் சேர்ந்துவாழ தயாராக இருந்தும் நான்தான் அவரை ஏற்றுக்கொள்ளாமல் வாழமறுத்துவருகிறேன் என்றால்

திருமணமான மூன்று மாதத்திலேயே இந்த நாயை கட்டிக்கொண்டு வந்துள்ளேன், நான் என் கணவருடன் வாழ்ந்து வந்த 3 மாதத்தில் என் கணவர் என்னை அடித்து எவ்வித துன்புறுத்தலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வாட்ஸ்சப் அனுப்பியதாக சொல்லி தாக்கல் செய்துள்ள ஆவணமான மதசாஆ.6 க்கும் என் கணவருக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கும் எனக்கும் என்னை வெளிநாடு அழைத்துச் செல்வதில் காலதாமதம் ஆனதால்தான் எங்களுக்குள் பிரச்சனை என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் என்னிடம் தன் மேல் எந்த தவறு இருந்தாலும் தன்னை மன்னித்து ஏற்குமாறு சொல்லிவந்தால் நான் சேர்ந்து வாழ தயாரா என்றால் நான் தயாராக இல்லை. நான் மனுவில் சொல்லியுள்ள விவரங்கள் எங்களுக்குள் பேசி தீர்த்துக்கொள்ளவேண்டிய பிரச்சனைதான் என்றாலும், விவகாரத்து வாங்கக்கூடிய பிரச்சனை இல்லை என்றாலும் சரியல்ல. ஏற்கனவே பெரியவர்களை வைத்தும், நண்பர்களை வைத்தும் பிரச்சனையை பேசினோம். தீரவில்லை. என்னுடைய மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.06.25 14:52:54 +0530

Principal District Judge,
Dindigul.